



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

### ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை





சிலருக்கு இளம் வயதிலிருந்தே மோக்ஷமடையவேண்டும் என்ற விருப்பம் இருக்கும். கூட்டத்திலிருந்து விலகித் தனிமையில் இருப்பது, ஸாத்விக உணவு சாப்பிடுவது, வேதாந்தப் புத்தகங்களைப் படிப்பது ஆகிய குணங்கள் இயற்கையாகவே அவர்களிடம் வளர்ந்து வரும். கொஞ்சம் கொஞ்சமாக த்யானத்தில் ஈடுபாடு உண்டாகும். அந்த ஸாதகன் தன் முற்பிறவியில் செய்த புண்யத்தின் பலனாலேயே இது ஏற்படும். மீண்டும் மீண்டும் எடுக்கப்படும் பல பிறவிகளில் உண்டாகும் உறுதியான பழக்கங்களின் விளைவாக இந்த சரீரம் தான் நான் என்ற விபரீத பாவம் திரும்பத் திரும்ப மனதில் தோன்றலாம். அதேபோல் இந்த உலகம் தான் ஸத்யம் என்றும் தோன்றலாம். இது தவறான எண்ணம். ஏகாக்ர சித்தத்துடன் த்யானம் செய்யச்செய்ய இந்தத் தவறான எண்ணம் மறைந்துவிடும்.

बहुजन्मदृढाभ्यासात् देहादिष्वात्मधीः क्षणात् ।
पुनः पुनरुदेत्येवं जगत्सत्यत्व धीरपि
विपरीता भावनेयं ऐकाग्र्यात्, सा निवर्तते ।।
ப3ஹுஜன்மத்3ரு’டா4ப்4யாஸாத் தே3ஹாதி3ஷ்வாத்மதீ4: க்ஷணாத் |
புன: புனருதே3த்யேவம்’ ஜக3த்ஸத்யத்வ தீ4ரபி
விபரீதா பா4வனேயம்’ ஐகாக்3ர்யாத், ஸா நிவர்ததே ||

ஆகையால் ஸாதகன் எப்பொழுதும் ஆத்மாவை தேஹத்திலிருந்து வேறாகக் கருதி, ஆத்மாவிலேயே மனதைச் செலுத்தி, இவ்வுலகம் நிஜமில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

तत्वभावनया नश्येत् साऽतो देहातिरिक्तताम्।
आत्मनो भावयेत्, तद्वत् मिथ्यात्वं जगतोऽनिशम् ।।
தத்வபா4வனயா நஶ்யேத் ஸா(அ)தோ தே3ஹாதிரிக்ததாம் |





## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஆத்மனோ பா4வயேத், தத்3வத் மித்2யாத்வம்' ஜக3தோ(அ)நிஶம் ||

இதை நன்றாக மனதில் பதியவைத்துக்கொள்ளும் ஸாதகன், உலக வ்யவஹாரம் செய்யும் ஸமயத்திலும், சாந்தமாக இருக்கமுடியும். அவன் எந்த விஷயங்களாலும் பீடிக்கப்படமாட்டான்.

நன்றி - அம்மன் தரிசனம்

ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அம்ருத துளிகள்


உலகில் நாம் பல்வேறு வஸ்துக்களைப் பார்க்கிறோம். அவற்றில் ஒன்றைக் காட்டிலும் வேறு ஏதாவது ஒன்று புதிதாகவும் சிறந்ததாகவும் தெரிகிறது. இந்த நிலையில், "எந்தப் பொருள், வேறு எல்லாவற்றைக் காட்டிலும் சிறந்ததாகவும் உயர்ந்ததாகவும் இருக்கிறது?" என்ற கேள்வி எழுகிறது. இக்கேள்விக்கான பதில் ஒரேமாதிரி இருப்பதில்லை. வெவ்வேறு ஜனங்கள் வெவ்வேறு விதமாகப் பதிலளிக்கிறார்கள். பெரும்பாலான மக்கள், "பணம் தான் சிறந்தது; பணமில்லாவிட்டால் எதையும் சாதிக்க முடியாது. ஆனால், பணம் மட்டும் இருந்துவிட்டால் எதையும் நாம் சாதித்து விடலாம்" என்று அவர்கள் பதிலளிக்கிறார்கள்.

பணமானது ஒரே இடத்தில் எவ்வளவு காலம்தான் நிலையாக இருக்கும்? ஒருவன் பெரிய சக்கரவர்த்தியாக இருப்பினும், சில காலத்தில் அவன் பிச்சைக்காரனாக ஆகி பிச்சை பாத்திரத்தோடு திரிவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதனால்தான்.


ப்ராதர் ய ஏவ ஜகதீதலசக்ரவர்தீ
ஸாயம் ஸ ஏவ விபினே ஜடிலஸ்தபஸ்வீ

என்று கூறப்பட்டிருக்கிறது. அதாவது, "காலையில் மிகப் பெரிய சக்கரவர்த்தியாக இருந்த அதே மனிதன் மாலையில் காட்டில் துறவியாவதற்கும் வாய்ப்பிருக்கிறது" என்பதே இதன் பொருள். பணத்தை நம்பிக் கொண்டிருந்தோமேயானால் நாம் முட்டாள்கள் ஆகிவிடுவோம்.

For free e magazines : Our Mail ID : Info@voiceofjagadguru.com



# Voice of Jagadguru



advaitam paramanandam — an e-magazine on advaita

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)


## ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்

### 6. ராமேசுவர யாத்திரை

அங்கிருந்து புறப்பட்டு சேலம் ஜில்லா வழியாக கணவாய் ஏறி ஹோசூர், ஆனைக்கல் மார்க்கமாக பெங்களூர் வந்து சேர்ந்தார்கள். அங்கு திவான் ஸர் கே.சேஷாத்திரி அய்யர் முதலான அதிகாரிகள் வந்திருந்து ஸகலவித ராஜமரியாதைகளுடன் வரவேற்றார்கள். அங்கு ஒரு வாரம் தங்கிவிட்டு சாமராஜ பிரபுக்களின் பட்டமஹிஷீ வாணீ விலாஸ ஸந்நிதான கெம்ப நஞ்சம்மண்ணியவர்களின் பிரார்த்தனையின் பேரில் மைசூருக்கு வந்து, மஹாராணியவர்களுக்கும் ராஜபுத்ரர்களுக்கும் தர்சனம் கொடுத்து அநேகவிதமான தர்மோபதேசங்களினால் அவர்களை ஸமாதானப்படுத்தினார்கள். அங்கிருந்து பச்சிமவாஹினீ, கிருஷ்ண ராஜப்பேட்டை வழியாக ஆஷாட சுக்ல சப்தமி (29-6-1895) ஸ்திரவாரம் சிருங்கேரியில் பிரவேசம் செய்தார்கள்.

### 7. ஞான நிலை


சிருங்கேரிக்கு ஸ்ரீமத் ஆசார்யார் திரும்பி வந்தவுடன் இந்த நான்கு வருஷகாலம் ஸஞ்சாரம் செய்ததில், ஜனங்களிடம் வெகுவேகமாய்க் குறைந்துகொண்டு வருகிற ஆஸ்திக்ய புத்தியையும் அனுஷ்டானங்களையும், ஜாஸ்தியாகிக்கொண்டு வருகிற நாஸ்திக்யத்தையும் துராசாரங்களையும் நினைத்து நினைத்து இவைகளுக்கு ஏதேனும் பரிஹாரம் செய்யவேண்டுமென்று தோன்றினாலும் அது ஸபலமாகுமாவென்ற ஸந்தேஹமும் தோன்றி மனது மிகவும் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தது. பிறகு தன்னாலாகக்கூடிய பிரவிருத்தியை செய்யவேண்டுமென்றும், பாக்கியெல்லாம் பகவத் ஸங்கல்பம்போல் நடக்குமென்றும் ஸமாதானப்படுத்திக்கொண்டு சிருங்கேரியிலேயே மன்மத வருஷம் சிராவண சுக்ல ஷஷ்டி தினம் (27-7-1895) ஸ்ரீ சாரதாம்பாளுக்கு விசேஷ பூஜைகள் செய்து, வேத சாஸ்திர அத்யயனத்திற்காக "ஸத்வித்யா ஸஞ்ஜீவிநீ" என்ற பெயருடன் ஒரு பாடசாலையை ஆரம்பித்தார்கள். அதற்கு வேண்டிய உபாத்யாயர்களையும் வித்யார்த்திகளையும் ஸங்கிரஹம் செய்தார்கள். தானும் அதிகார ஸம்பன்னர்களான சிலர்களுக்கு, வேதாந்த சாஸ்திர பாடம் சொல்லவாரம்பித்தார்கள். அதிக உத்ஸாஹத்துடன் பிரஹ்மஸூத்ரம், உபநிஷத்துக்கள், பகவத்கீதை என்ற ப்ரஸ்தானத்ரயத்தின் பாஷ்யங்களையும் மூன்று வருஷ காலத்தில் பூர்த்தியாக பாடம் சொன்னார்கள்.

அதன்பிறகு ஏகாந்தவாஸத்தில் ருசி ஜாஸ்தியாக ஏற்பட்டதின் பேரில் சிருங்கேரியில் துங்கா நதிக்குத்தென்பக்கம் துஷ்ட மிருகங்கள்

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)



An Unit of the e magazine Voice of Jagadguru)

ஸஞ்சரிக்கக்கூடியதாக விருந்த அரண்யத்தை சீர்திருத்தி தபோவனமாகச் செய்து அதற்குத் தன் குருநாதர் பெயரால் "நரஸிம்ஹ வனம்" என்று பெயரிட்டு அதிலேயே ஒரு பர்ணசாலை ஏற்படுத்திக் கொண்டு அதற்கு விகாரி வருஷம் ஆசுவயுஜ பகுள பஞ்சமீ (24-9-1899) காலையில் விஜயம் செய்தார்கள். ஸம்ஸ்தானத்திற்கேற்பட்ட ராஜ சின்னங்களையும், தங்கம், வெள்ளி முதலிய பாத்திரவர்க்கங்களையும் உபயோகிப்பதை நிறுத்திவிட்டார்கள். ஸாயங்காலம் அரண்யத்திற்குள் பிரவேசித்து உசிதமான ஸ்தலத்தில் நிர்குணத்யானத்திலிருந்து ஆதமானந்தத்தை அடைந்து வந்தார்கள். ஆனால் கிரமப்படி பூஜைகளோ, பாடப்ரவசனமோ நடந்தே வந்தன.



இப்படியிருக்கும் ஸமயம் மைசூர் மஹாராஜா நால்வடி கிருஷ்ணராஜ பிரபுக்கள் தன் வித்யாப்யாஸ அதிகாரியான பிரேஸர் என்ற ஐரோப்பியருடன் சிருங்கேரிக்கு விஜயம்செய்து ஸ்ரீமடம் அதிகாரிகளால் விசேஷ மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டார். அவர்களும் நரஸிம்ஹவனத்திலேயே ஆசார்யாரவர்களை தர்சித்தார்கள். அவர்களுடன் வந்திருந்த பிரேஸர் என்பவருக்கு ஸ்ரீஸ்வாமிகளுடன் ஏகாந்தமாய் ஸம்பாஷணை செய்ய வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது. அதற்கு ஸ்ரீஸ்வாமிகளும் அனுமதித்து ஸாயங்காலம் நான்கு மணி முதல் எட்டு மணிவரையில் பேசிக்கொண்டிருந்தார்கள். அநேகமாய் உலக வியவஹாரங்களிலேயே ருசியும் பரிச்சயமுமுள்ள இவருடைய மனதைக் கவர்ந்து கொண்ட ஆசார்யாரிடம் இவருக்கு ஏற்பட்ட மரியாதைக்கும் பக்திக்கும் அளவே இல்லை. தன் மனோபாவத்தைக் கண்டு அவர் பின்னால் ஸ்ரீமடத்திற்கு எழுதியிருப்பதிலிருந்து எவ்வளவு தூரம் ஈடுபட்டாரென்பது நன்கு தெரிகிறது. மஹாராஜா வந்திருந்த ஸமயம் ஸ்ரீ சாரதாம்பாளுக்கு தெப்போத்ஸவம் அதிமனோஹரமாய் நடத்தப்பட்டது. மறுநாள் மஹாராஜா மைசூர் திரும்பிவிட்டார்கள். அவர் தன் ராஜ்ய பாரத்தை வஹிப்பதற்கு முன்னதாக இரண்டாவது தடவை அதே பிரேஸர் துரையுடன் ப்லவ வருடம் கார்த்திகை மாஸத்தில் சிருங்கேரிக்கு வந்திருந்து அனுக்ரஹம் பெற்றுக்கொண்டு திரும்பினார்கள். அந்த ஸமயம் அந்த பிரேஸர் துரை "ஸம்ஸாரிகளான எங்கள் வீட்டிற்கு யாரேனும் வந்தால் ஏதேனும் களை தீர்க்கக் கூடிய காபி, டீ முதலிய பதார்த்தங்களைக் கொடுத்து உபசரிக்கிறோம். தாங்களோ தங்கள் ஹிருதயத்தில் நிறைந்து கொண்டிருக்கிற அளவில்லாத ஆனந்தத்தை அள்ளி அள்ளி எங்களுக்குக் கொடுத்து எங்களையும் ஆனந்திக்கச் செய்கிறீர்கள்" என்று சொன்ன வார்த்தை வெகு உண்மையே.

(தொடரும்…)

Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

# ॥ श्रीगणेशभुजङ्गम् ॥
.. ஶ்ரீக³ணேஶபு⁴ஜங்க³ம் ..

प्रकाशज्जपारक्तरत्नप्रसून-
प्रवालप्रभातारुणज्योतिरेकम् ।
प्रलम्बोदरं वक्रतुण्डैकदन्तं
गणाधीशमीशानसूनुं तमीडे ॥ ३ ॥

ப்ரகாஶஜ்ஜபாரக்தரத்னப்ரஸூன-
ப்ரவாலப்ரபா⁴தாருணஜ்யோதிரேகம் |
ப்ரலம்போ³த³ரம்’ வக்ரதுண்டை³கத³ந்தம்’
க³ணாதீ⁴ஶமீஶானஸூனும்’ தமீடே³ ||3||



प्रकाशत् {ப்ரகாஶத்} = மிளிரும்; जपा {ஜபா} = செம்பருத்தி மலர்போல; रक्त {ரக்த} = சிவந்த; रत्नप्रसून {ரத்னப்ரஸூன} = இரத்தினம் புஷ்பம்; प्रबाल {ப்ரபா³ல} = துளிர்; प्रभातारुण {ப்ரபா⁴தாருண} = காலைக்கதிரவன் இவைகளைப்போன்ற; ज्योति: {ஜ்யோதி:} = ஒளியை யுடையவரும்; एकम् {ஏகம்} = இரண்டற்றவரும்; प्रलम्बोदरम् {ப்ரலம்போ³த³ரம்} = பெரிய வயிற்றையுடையவரும்; वक्रतुण्डम् {வக்ரதுண்ட³ம்} = வளைந்த முகத்தையுடைய வரும்; एकदन्तं {ஏகத³ந்தம்’} = ஒரு தந்தமுடையவரும்; गणाधीशं {க³ணாதீ⁴ஶம்’} = கணாதிபதியுமான; तं ईशानसूनुम् {தம்’ ஈஶானஸூனும்} = அந்த ஈச புத்திரனை; ईडे {ஈடே³} = போற்றுகின்றேன்.

கணபதியின் தோற்றம் மிகப் பொலிவு பெற்று விளங்குகின்றது. செம்பருத்திப்பூ, சிவந்த ரத்னம், துளிர், அருணன் இவைகளைப்போல் சிவந்திருக்கின்றது. இருப்பினும் ஒப்பற்றது. அத்விதீயமானது. அவரது வயிறு பருமனாகத் தோன்றுவதால் அவருக்குத் தொந்தி விநாயகர் என்ற பெயரும் வழங்கலாயிற்று. நீண்ட துதிக்கையை

உடையவராக இருப்பதால் அவரது முகம் சிறிது கோணலாக இருக்கின்றது. அவ்விநாயகக் கடவுளை நான் போற்றுகிறேன்.

विचित्र स्फुरद्रत्नमाला किरीटं
किरीटोल्लसच्चन्द्र रेखाविभूषम् ।
विभूपैकभूषं भवध्वंसहेतुं
गणाधीशमीशानसूनुं तमीडे ॥ ४ ॥

விசித்ர ஸ்பு$^{2}$ரத்$^{3}$ரத்னமாலா கிரீடம்’
கிரீடோல்லஸச்சந்த்$^{3}$ர ரேகா$^{2}$விபூ$^{4}$ஷம் |
விபூ$^{4}$பைகபூ$^{4}$ஷம்’ ப$^{4}$வத்$^{4}$வம்’ஸஹேதும்’
க$^{3}$ணாதீ$^{4}$ஶமீஶானஸூனும்’ தமீடே$^{3}$ ||4||

विचित्र {விசித்ர} = பலவர்ணங்களுடன்; स्फुरत् {ஸ்பு$^{2}$ரத்} = பிரகாசிக்கின்ற; रत्नमाला {ரத்னமாலா} = ரத்னங்களின் வரிசைகளையுடைய; किरीटम् {கிரீடம்} = கிரீடத்துடன் கூடியவரும்; किरीट {கிரீட} = கிரீடத்தில்; उल्लसत् {உல்லஸத்} = விளங்குகின்ற; चन्द्ररेखा {சந்த்$^{3}$ரரேகா$^{2}$} = சந்திர கலையாகிய; विभूषम् {விபூ$^{4}$ஷம்} = சிறந்த அணிகலத்தையுடையவரும்; विभूषैकभूषम् {விபூ$^{4}$ஷைகபூ$^{4}$ஷம்} = அணிகலனுக்கு அணிகலனாகத் திகழ்கின்றவரும்; भव {ப$^{4}$வ} = பிறவியை; ध्वंस {த்$^{4}$வம்’ஸ} = நாசம் செய்வதற்கு; हेतुं {ஹேதும்’} = காரணமானவரும்; गणाधीशं {க$^{3}$ணாதீ$^{4}$ஶம்’} = கணங்களுக்கதிபருமான; तं {தம்’} = அந்த; ईशानसूनुं {ஈஶானஸூனும்’} = சிவபெருமானின் திருக்குமாரனை; ईडे {ஈடே$^{3}$} = போற்றுகின்றேன்.

சிவபெருமானின் திருக்குமாரன் சிறந்த அணிகலன்களுடன் காட்சியளிக்கின்றான். அவனுடைய தலையில் நவ ரத்னங்கள் பதிக்கப்பெற்ற கிரீடம் பொலிவு பெற்று விளங்குகின்றது. சந்திரகலை கிரீடத்தின் மேலிருந்துகொண்டு மிகுந்த ஒளியைப் பரப்புகின்றது. ஆயினும் இவ்வணிகள் சிவகுமாரனின் சிரசில் விளங்குவதால் சிறந்த காந்தியைப் பெறுகின்றன. ஆதலால் அணிகளுக்கே அணிகளாகத் திகழ்கிறான் இக்குமாரன். உலகிலோ எனில் அணிகளால் ஆடவன் அழகு பெறுகின்றான். இவ்விதம் காட்சியளிக்கும் ஈச புத்ரனைப்போற்றுவதால் பிறவி என்னும் பிணி நாசமடைவது திண்ணம். இவ்வாறு மோக்ஷ சாம்ராஜ்யத்தை யளிக்கும் இக்கணபதியை யாம் தொழுவோமாக.

(தொடரும்)

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)



### ||ஸிவபக்தி கல்பலதிகா||

ஶ்ரீ ஶ்ரீதர ஐயாவாள்

लग्नः कृतान्तवदनेऽस्मि लभे च नाद्या-प्यच्छां रतिं त्वयि शिवेत्यवसीदतो मे।

त्वद्विस्मृतिं कुविषयाभिरतिप्रचारैः तन्वन् हि मां हसपदं तनुषे ब्रुवे किम् ।।

லக்³ன: க்ரு’தாந்தவத³னே(அ)ஸ்மி லபே⁴ ச நாத்³யா-ப்யச்சா²ம்’ ரதிம்’ த்வயி ஶிவேத்யவஸீத³தோ மே |

த்வத்³விஸ்ம்ரு’திம்’ குவிஷயாபி⁴ரதிப்ரசாரை: தன்வன் ஹி மாம்’ ஹஸபத³ம்’ தனுஷே ப்³ருவே கிம் ||10||

சிவபெருமானே! எமனின் வாயில் நான் சிக்கிக் கொண்டுள்ளேன். இப்பொழுது கூட எனது துர்பாக்கியத்தால் உம்மிடம் தெளிவான பக்தி எனக்கு ஏற்படவில்லயே என்று வருந்துகின்ற எனக்கு, தீய செயல்களில் ஈடுபாட்டைத்தந்து உம்மை பற்றி நினைவின்மையை வலிய ஏற்படுத்தி என்னை ஏன் கேலிக்குரியவனாக ஆக்குகிறீர். நான் என்ன என்று சொல்வேன்? (12)

बद्धस्पृहं रुचिरकाञ्चनभूषणादौ बालं फलादिभिरिव त्वयि भक्तियोगे ।

आशाभराकुलमहो करुणानिधे मां अर्थान्तरैर्हृतधियं कुरुषे किमेवम् ।।

ப³த்³த⁴ஸ்ப்ரு’ஹம்’ ருசிரகாஞ்சனபூ⁴ஷணாதௌ³ பா³லம்’ ப²லாதி³பி⁴ரிவ த்வயி ப⁴க்தியோகே³ |

ஆஶாப⁴ராகுலமஹோ கருணாநிதே⁴ மாம்’ அர்தா²ந்தரைர்ஹ்ரு’ததி⁴யம்’ குருஷே கிமேவம் ||

கருணையின் இருப்பிடமான சிவபெருமானே! சிறுவனை பழம் முதலியவனை காட்டி ஏமாற்றுவது போல், உம்மிடம் பக்தியில் பெரிதும் ஈடுபட்ட பட்டுள்ள என்னை, மனதைக் கவரக்கூடிய அழகிய தங்க நகை முதலியவற்றில் அதிக நாட்டம் பெறச்செய்து என்னை ஏன் மற்ற பொருட்களில் என்னுடைய உள்ளத்தை பறிகொடுத்தவனாக இப்படி செய்து விட்டீர்கள்.

(தொடரும்)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

# सन्ध्यावन्दनम्

## ஸந்த்⁴யாவந்த³னம்

[சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அருளிய விளக்கங்களுடன்]

ஸந்த்யாவந்தனத்தின் அமைப்பு:



"அங்கு (சுத்தமான இடத்தில்) ஆசனத்தில் அமர்ந்து மனதை ஒருநிலைப்படுத்தி மனம் மற்றும் இந்த்ரியங்களின் சேஷ்டைகளை அடக்கி மனதைச் சுத்தப்படுத்துவதற்காக யோகத்தை அனுஷ்டிக்கட்டும். உடலையும் தலையையும், கழுத்தையும் நிமிர்த்தி அசையாமல் வேறெங்கும் பார்க்காமல் மூக்கின் நுனியை மட்டும் பார்ப்பது போல் இருந்து (த்யானம் செய்து கொண்டு இருக்கட்டும்)" என்று தெரிவித்திருக்கிறார்.

ஸந்த்யாவந்தனத்தின் மூன்றாவது அங்கமாகத் திகழும் உபஸ்தானம் ஸூர்யனாகச் சிந்திக்கப்படும் ஈஸ்வரனுடைய குணங்களைப் போற்றுதல் ஆகும். 'மித்ரஸ்ய சர்ஷணி', 'ஆஸத்யேன', 'இமம் மே வருண', என்கிற மந்த்ரங்களை உபஸ்தானத்தின் போது முறையே காலையிலும் மதியத்திலும் மாலையிலும் உச்சரிக்க வேண்டும்.

ஸந்த்யாவந்தனத்தின் மூன்று பகுதிகளில் அர்க்யம் என்பது மிகவும் முக்கியமானது. நம் வாழ்வில் உணவை விட்டு வாழ்வது முடியாது. ஏனென்றால், உணவில்லாமல் உயிரோடு இருக்க முடியாது. மற்ற வ்யவஹாரங்களை வேண்டுமானால் நாம் விட்டு வாழலாம். சாப்பிடுவது நம் வாழ்வில் எப்படி இன்றியமையாததோ அதேபோல் அர்க்யம் என்பது ஸந்த்யா வந்தனத்தில் இன்றியமையாதது. ஸந்த்யாவந்தனம் ஒரு நித்யகர்மா. அதை விட்டுவிடாமல் தினந்தோறும் அனுஷ்டிக்க வேண்டும். ஆபெஸளசம் (தீட்டு) ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்? ஜபம் மற்றும் மீதி கர்மாக்களை

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஆபொளசம் இருக்கும்பொழுது செய்யக்கூடாது என்று ஸ்ம்ருதி கூறுகிறது. மற்றொரு பக்கம்,

अहरहः सन्ध्यामुपासीत

அஹரஹ꞉ ஸந்த்⁴யாமுபாஸீத

"தினந்தோறும் ஸந்த்யா உபாஸனையைச் செய்ய வேண்டும்" என்று ஸ்ருதி கூறுகிறது. இந்நிலையில், நாம் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்விக்குப் பின்வரும் மற்றொரு ஸ்ம்ருதியே விளக்கமளிக்கிறது.

सूतके सावित्र्याऽञ्जलीं प्रक्षिप्य प्रदक्षिणं कृत्वा सूर्यं ध्यायन्नमस्कुर्यात्

(पैठीनसीस्मृतिः इति स्मृतिचन्द्रिकायाम् आह्निककाण्डे सन्ध्याप्रयोगे)'\

ஸூதகே ஸாவித்ர்யா(அ)ஞ்ஜலீம்' ப்ரக்ஷிப்ய ப்ரத³க்ஷிணம்' க்ரு'த்வா ஸூர்யம்' த்⁴யாயந்நமஸ்குர்யாத்

(பைடீ²னஸீஸ்ம்ரு'தி꞉ இதி ஸ்ம்ரு'திசந்த்³ரிகாயாம் ஆஹ்னிககாண்டே³ ஸந்த்⁴யாப்ரயோகே³)'

[இவ்வாக்யம் பைட்டீனஸீ ஸ்ம்ருதியைச் சேர்ந்தது என்று ஸ்ம்ருதி சந்த்ரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்ம்ருதி சந்த்ரிகை சுமார் 800 ஆண்டுகள் பழமை வாய்ந்த, ஸ்ம்ருதி வாக்யங்களின் தொகுப்பு அடங்கிய ஒரு பிரமாண நூல். பைட்டீனஸீ ஸ்ம்ருதி என்பது இப்போது அச்சில் நமக்குக் கிடைப்பதில்லை]

"ஆசௌசமிருந்தாலும் அர்க்யம் கொடுத்து ஸூர்யனை த்யானித்து நமஸ்காரம் செய்ய வேண்டும்" என்று கூறி ஆசௌசத்திலும் அர்க்யம் வரையுள்ள கர்மாவைச் செய்ய வேண்டும் என்று தெரிவிக்கின்றது. இதை மட்டும் செய்தாலே ஆசௌசம் இருக்கும்பொழுது ஸந்த்யாவந்தனம் செய்த பலன் கிடைக்கும். அதாவது அர்க்யத்திற்குத் ஸந்த்யாவந்தனத்தின் மூன்று பகுதிகளிலிருந்தும் தொடர்பு நின்று போதல் கிடையாது. தவிர, சில சமயங்களில் அர்க்யமே ஸந்த்யாவந்தனத்தின் முழுப் பலனையும் தருகிறது. ஆகையால் அர்க்யதானம் மிக முக்கியம். ஆசௌசம் இருக்கும் சமயத்தில் ஜபத்தையும் உபஸ்தான மந்த்ரங்களையும் மனதாலேயே சொல்லலாம். ஆனால் வாயால் உச்சரிக்கக்கூடாது.

(தொடரும்)

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

# श्रीमन्नारायणीयम्

## ஶ்ரீமந்நாராயணீயம்

### षष्ठं दशकम्

ஷஷ்ட²ம்’ த³ஶகம் விராட்புருஷநின் வடிவ வர்ணனை

एवं चतुर्दश जगन्मयतां गतस्य
पातालमीश तव पादतलं वदन्ति |
पादोर्ध्व देशमपि देव रसातलं ते
गुल्फद्वयं खलु महातलं अद्भुतात्मन् ||१||

ஏவம்’ சதுர்த³ஶ ஜக³ன்மயதாம்’ க³தஸ்ய
பாதாலமீஶ தவ பாத³தலம்’ வத³ந்தி |
பாதோ³ர்த்⁴வ தே³ஶமபி தே³வ ரஸாதலம்’ தே
கு³ல்ப²த்³வயம்’ க²லு மஹாதலம்’ அத்³பு⁴தாத்மன் ||1||



ஓ குருவாயூரப்பா! இவ்வாறு பதினான்கு உலக ரூபமாயிருக்கும் உம்மையுடைய தன்மைப் போற்றுகின்றேன். ஹே ப்ரபோ! உம்முடைய உள்ளங்கால்களே பாதால லோகமாக ஆனது. ரஸாதலம் தங்களுடைய கால்களின் மேல் பகுதி என்று வேதம் கூறுகின்றது.உம்முடைய இரு கணுக்கால்களும் மஹாதலமானது என்று மஹான்கள் கூறுகின்றன.

जङ्खे तलातलमथो सुतलं च जानू
किञ्चोरुभाग युगलं वितलातले द्वे ।
क्षोणीतलं जघनमंबरमङ्ग नाभिः
वक्षश्च शक्रनिलयस्तव चक्रपाणे ||२||

ஜங்கே² தலாதலமதோ² ஸுதலம்’ ச ஜானூ
கிஞ்சோருபா⁴க³ யுக³லம்’ விதலாதலே த்³வே |
க்ஷோணீதலம்’ ஜக⁴னமம்ப³ரமங்க³ நாபி⁴:
வக்ஷஶ்ச ஶக்ரநிலயஸ்தவ சக்ரபாணே ||2||

ஹே குருவாயூரப்பா! உம்மை இந்த சாதாரண கண்களால் பார்ப்பது துர்லபம். ஆதலாலேயே உமது முழங்கால்கள் தலாதலமென்றும், துடை பகுதிகள் ஸுதல லோகமாகவும் ஆனதோ...? உம்முடைய இரண்டு துடை பிரதேசங்களும்

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

விதலம், அதலம் என்ற இரண்டு உலகங்களாக மாறியதாக கூறப்படுகிறது. கையில் சக்கரத்தை ஏந்தியுள்ள ப்ரபோ உம்முடைய இடுப்பே பூலோகமாகவும், தொப்புள் ஆகாசமாகவும், மார்பு பகுதி இந்திர லோகமானது என்று ஆன்றோர்கள் கூறுகிறார்கள்.

ग्रीवा महस्तव मुखं च जनस्तपस्तु
फालं शिरस्तव समस्तमयस्य सत्यम् ।
एवं जगन्मयतनो जगदाश्रितैर-
प्यन्यैः निबद्ध वपुषे भगवन् नमस्ते ॥३॥



க்³ரீவா மஹஸ்தவ முக²ம்' ச ஜனஸ்தபஸ்து
பா²லம்' ஶிரஸ்தவ ஸமஸ்தமயஸ்ய ஸத்யம் |
ஏவம்' ஜக³ன்மயதனோ ஜக³தா³ஶ்ரிதைர-
ப்யன்யை: நிப³த்³த⁴ வபுஷே ப⁴க³வன் நமஸ்தே ||3||

ஹே குருவாயூரப்பா! மஹர் லோகமே உம்முடைய கழுத்துப் பகுதியானது. உம்முடைய அழகிய முகம் ஜனோலோகமாகவும் , அகன்ற நெற்றிப் பகுதி தபோ லோகமாகவும் ஆனது என்று வேதத்தில் உள்ளது என்று முனிவர்கள் கூறுகிறார்கள். உம்முடைய தலையே ப்ரம்ம லோகமானது. உம்முடைய தேகமே எல்லா லோகங்களாக காட்சி அளிக்கின்றது. அப்படி பட்ட சரீரத்தை உடைய உமக்கு நமஸ்காரங்கள். ஹே ப்ரபோ ! என்னுடைய வியாதி கூட்டங்களை போக்கி விடுங்கள்.

Our Mail ID : Info@voiceofjagadguru.com

(தொடரும்...)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

# श्री रुद्रप्रश्नः

## ஶ்ரீ ருத்³ரப்ரஶ்ன:

### தியானம்



இந்த பிரம்மாண்டம் முழுவதும் பரவிய உமது சரீரத்தை தியானம் செய்கின்றேன். உமது உடலில் பூசியுள்ள வீபூதி பனியையொத்த ஒளியை தருகிறது, உமது அங்கங்களில் உள்ள ஸர்ப்பாபரணங்களும், அழகிய கறுத்த கழுத்தும், அந்தப் பிறைச் சந்திரனைச் சூடிய ஜடாமுடியும், உம்முடைய உக்கிரமான வில்லேந்திய கைகளும் எங்களுடைய சிந்தையுள்ளே எப்பொழுதும் தியானத்தில் இருக்க வேண்டும். உம்முடைய முக்கண்கள், ருத்ராட்ச மாலைகள், இவைகளையுடையவர்களாயும், வணங்குபவரின் அச்சத்தைப் போக்குபவர்களாயும், பரமேசுவரரின் ரூபபேதங்களாயும், ஶ்ரீருத்ரஸூக்தத்தினால் வெளிப்படுத்தப்பட்ட மகிமையுடையவர்களாயும் விளங்கும் ருத்திரர்கள் நமக்கு எப்பொழுதும் இன்பப்பேற்றை அளிக்கட்டும்.

'லம்' என்ற பிருதிவி பீஜத்தால் பிருதிவி வடிவான உமக்கு கந்தம் ஸமர்ப்பிக்கின்றேன்.

'ஹம்' என்ற ஆகாச பீஜத்தால் ஆகாசவடிவான உம்மைப் புஷ்பங்களால் பூஜிக்கின்றேன்.

'யம்' என்ற வாயு பீஜத்தால் வாயுவடிவான உமக்கு தூபம் காட்டுகின்றேன்.

'ரம்' என்ற அக்னி பீஜத்தால் அக்னி வடிவமான உமக்கு தீபம் காட்டுகின்றேன்.

'வம்' என்ற அம்ருத பீஜத்தால் அம்ருத வடிவான உமக்கு அம்ருத மஹா நைவேத்தியத்தைத் தெரிவிக்கின்றேன்.

'ஸம்' என்ற ஸர்வாத்ம பீஜத்தால் ஸர்வாத்மகரான உம்மை எல்லா உபசாரங்களாலும் பூஜிக்கின்றேன்

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்